ந.க.எண்.வி2/14297/90/2016

காவல் ஆணையர் அலுவலகம்,
மதுரை மாநகர், மதுரை.

நாள். 20.10.2016

## நிரந்திர பட்டாசுக்கடை உரிமத்தை நீட்டிக்க மறுக்க விளக்கம் கோரும் அறிவிப்பு

பொருள் :- காவல் - மதுரை மாநகர் - வெடிபொருள் சட்டம் மற்றும் விதிகளும் படி – கதவு எண்.73/1, சம்மட்டிபுரம் மெயின் ரோடு, மதுரை என்ற முகவரியில் நிரந்தர பட்டாசு சில்லரை விற்பனைக் கடைக்கான உரிமத்தை நீட்டிக்க மறுக்க விளக்கம் கோரும் அறிவிப்பு – தொடர்பாக.

பார்வை :- தங்களது விண்ணப்பம் நாள். 26.02.2016.

*****

திரு.T.பாலமுருகன், என்பவர் கதவு எண்.73/1, சம்மட்டிபுரம் மெயின் ரோடு, மதுரை என்ற முகவரியில் நிரந்தர பட்டாசு சில்லரை விற்பனைக்கடைக்கான காவல் உரிமம் வி2/எக்ஸ்ப்ளோ.சி.01/12-13, 2016-2017ஆம் ஆண்டிற்கு புதுப்பிக்கக் கோரி விண்ணப்பத்துள்ளீர்கள்.

2. தங்களது நிரந்தர பட்டாசுக் கடை உரிமத்தை புதுப்பிப்பது தொடர்பாக, காவல் துணை ஆணையர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) அவர்கள் ஆய்வு செய்ததில் தங்களது கடையில் கீழ்க்கண்ட குறைபாடுகள் வெடிபொருட்கள் சட்டப்பிரிவுகள், விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு விரோதமாக செயல்படுவதாக கண்டறியப்பட்டது.

(a) Main entrance is having 2 tier doors. Outer iron door is opening outward. Inner wooden door is opening into the cracker shop (inward).

(b) Upper floor is being used as community meeting hall.

(c) Staircase is situated very nearly to the cracker shop.

(d) A cargo transport office and godown is situated within 15 meters.

(e) Possession and selling of fireworks is doing in same shed.

3. எனவே, பொதுமக்கள் நலன் மற்றும் பாதுகாப்பு கருதி தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமத்தில் கண்டுள்ள ஷரத்துகள் மற்றும் நிபந்தனைகளுக்கு விரோதமாகவும் செயல்படுவதால், ஏன் தங்களது நிரந்தர உரிமகாலத்தை நீட்டிக்க மறுக்கக்கூடாது என்பதற்கான விளக்கத்தை இந்த அறிவிப்பு கிடைத்த ஒரு வாரத்திற்குள்

Scanned by CamScanner

தெரிவிக்கும்படி கோரப்படுகிறீர். குறிப்பிட்ட காலத்திற்குள் விளக்கம் ஏதும் பெறப்படவில்லையெனில் தங்களுக்கு விளக்கம் அளிக்க ஏதும் இல்லையென தீர்மானம் செய்து வெடிபொருட்கள் சட்டவிதிகளுக்குட்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஓம்.) சைலேஷ் குமார் யாதவ்,
காவல் ஆணையர்,
மதுரை மாநகர்.

பெறுநர்

திரு. T.பாலமுருகன்,
எண்.73/1, சம்மட்டிபுரம் மெயின் ரோடு, மதுரை. (இரட்டை நகலில்)
(காவல் உதவி ஆணையர், திலகர்திடல் (ச.ஒ) சரகம், மதுரை மாநகர் மூலமாக ஒன்றினை சார்பு செய்து ஏற்பளிப்பு செய்த நகலினை 3 தினங்களுக்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும்)

நகல் : காவல் துணை ஆணையர், (ச.ஒ). மதுரை மாநகர் மதுரை.
காவல் உதவி ஆணையர், திலகர்திடல் (ச.ஒ) சரகம். மதுரை மாநகர் மதுரை.

/உண்மை நகல்/ஆணைப்படி/

முதுநிலை நிர்வாக அதிகாரி.

Scanned by CamScanner